5. All documents referred to in the Notice and the Explanatory Statement thereto shall be made available for inspection by the Members of the Company, without payment of fees, upto and including the date of AGM. Members desirous of inspecting the same may send their requests at share.dept@bata.com from their registered e-mail addresses mentioning their names and folio numbers / demat account numbers.
6. In case of any queries / grievances relating to e-Voting, Members may refer to "Frequently Asked Questions on e-Voting (For Shareholders).pdf" and "e-Voting Manual - Shareholder.pdf" available at the "Download" section of NSDL e-Voting website, i.e., www.evoting.nsdl.com or call on: 022 - 4886 7000 or contact Ms. Pallavi Mhatre, Senior Manager of NSDL or at e-mail id: evoting@nsdl.co.in . Members holding securities in demat mode with CDSL, can call at Toll Free No.: 1800 22 55 33 or at e-mail id: helpdesk.evoting@cdslindia.com. For any further assistance, Members may also contact Mr. Nitin Bagaria, Company Secretary, Bata India Limited at Telephone No.: (0124) 3990100 or at e-mail ID share.dept@bata.com

**NOTICE** is hereby also given that pursuant to Section 91 of the Act, Rule 10 of the said Rules and Regulation 42 of the Listing Regulations, the Register of Members and the Share Transfer Registers of the Company shall remain closed from **Thursday, August 1, 2024** to **Wednesday, August 7, 2024 (both days inclusive),** for the purpose of the AGM and payment of dividend.

**For BATA INDIA LIMITED**
Sd/-
**NITIN BAGARIA**
*Company Secretary & Compliance Officer*

Place : Gurugram
Date : July 15, 2024

## திருச்சி மாநகராட்சியுடன் ஊராட்சிகளை இணைக்க எதிர்ப்பு

# ஸ்ரீரங்கத்தில் 22–ந் தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்: எடப்பாடி அறிவிப்பு

சென்னை, ஜூலை 16–

ஸ்ரீரங்கம், மண்ணச்சநல்லூர், லால்குடி, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல ஊராட்சிகளை திருச்சி மாநகராட்சியுடன் இணைப்பதற்கு திட்டமிட்டு, ஏழை, எளிய மக்களை வேதனைக்கு ஆளாக்கத் துடிக்கும் திமுக அரசைக் கண்டித்தும்; இத்திட்டத்தை உடனடியாகக் கைவிட வலியுறுத்தியும், திருச்சி புறநகர் வடக்கு, திருச்சி புறநகர் தெற்கு, திருச்சி மாநகர் ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் 22–ந் தேதி திங்கட் கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

அண்ணாதி.மு.க. ஆட்சிக்காலங்களில் மக்கள் அனைத்து வகைகளிலும் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு பல்வேறு மகத்தான மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆனால், திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில் இருந்து, மின் கட்டணம், பால் விலை, குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பு வரி, சொத்து வரி, பத்திரப் பதிவுக் கட்டணம் முதலானவற்றின் கட்டணங்களை உயர்த்தி, மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்குக் கூட மிகுந்த சிரமப்பட்டு வருவது நாடறிந்த உண்மை.

அந்த வகையில் திமுக ஆட்சியில், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 26 ஊராட்சிகளும், அதேபோல் மண்ணச்சநல்லூர், லால்குடி, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல ஊராட்சிகளையும், பொதுமக்களின் கருத்துகளைக் கேட்காமலும், பொதுமக்களை பாதிக்கும் வகையிலும், திருச்சி மாநகராட்சியுடன் இணைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிய வருகின்றன.

### கிராம மக்கள் பாதிப்பு

கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசின் மூலமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு 100 நாள் வேலை கிடைக்கப்பெற்று குறைந்தபட்சம் அவர்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான நிதி கிடைக்கும். அதேபோல், கிராம சாலைகள் திட்டம், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளான குடிநீர் இணைப்பு, கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்து தரப்படும். ஊராட்சிகளுக்கு மத்திய அரசின் பல்வேறு நிதித் தொகுப்புகள் முழுமையாகக் கிடைக்கும். ஊராட்சிகள் மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டால், மத்திய அரசில் இருந்து இவ்வசதிகள் தங்களுக்கு கிடைக்காமல் போய்விடும் என மக்கள் அச்சப்படுகின்றனர்.

ஸ்ரீரங்கம், மண்ணச்சநல்லூர், லால்குடி, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல ஊராட்சிகளை திருச்சி மாநகராட்சியுடன் சேர்ப்பதால், குடிநீர் கட்டணம், கழிவுநீர் கட்டணம், வீட்டு வரி, வீட்டு வாடகை, வீடு கட்டுவதற்கான அனுமதி, பத்திரப் பதிவுக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்கள் பன்மடங்கு உயர்ந்துவிடும். இதன் காரணமாக ஏழை, எளிய மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவார்கள்.

### மக்களின் கருத்து கேட்காமல்....

ஊராட்சியை மாநகராட்சியுடன் சேர்ப்பதாக இருந்தால் சம்பந்தப்பட்ட கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறிந்து அதன்படி செயல்பட வேண்டும். ஆனால், திமுக அரசு மேற்கண்ட எதையும் கருத்தில் கொள்ளாமல் ஏழை, எளிய மக்களை வாட்டி வதைக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியதாகும்.

இந்நிலையில், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 26 ஊராட்சிகளும், அதேபோல் மண்ணச்சநல்லூர், லால்குடி, திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பல ஊராட்சிகளையும், பொதுமக்களின் கருத்துகளைக் கேட்காமலும், பொதுமக்களை பாதிக்கும் வகையிலும், திருச்சி மாநகராட்சியுடன் இணைப்பதற்கு திட்டமிட்டுள்ள திமுக அரசைக் கண்டித்தும், ஏழை, எளிய மக்களின் நலன் கருதி இத்திட்டத்தைக் கைவிட வலியுறுத்தியும், அண்ணா தி.மு.க. திருச்சி புறநகர் வடக்கு, திருச்சி புறநகர் தெற்கு, திருச்சி மாநகர் ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில், 22–ந் தேதி திங்கட் கிழமை காலை 10 மணியளவில், ஸ்ரீரங்கம் தொகுதி, அல்லித்துறை அண்ணா திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணி, கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் தலைமையிலும்; திருச்சி புறநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எம். பரஞ்ஜோதி, திருச்சி புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ப. குமார், திருச்சி மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் ஜெ. சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திருச்சி புறநகர் வடக்கு, திருச்சி புறநகர் தெற்கு, திருச்சி மாநகர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகள், உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏழை, எளிய மக்கள் நலனை முன்வைத்தும், திமுக அரசைக் கண்டித்தும் நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், விவசாயிகள், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: ஐகோர்ட்டில் அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ஆஜர்

சென்னை, ஜூலை 11–

ஐகோர்ட் உத்தரவுப்படி தனக்கு ஓய்வூதிய பலன்கள் வழங்கப்படவில்லை எனக்கூறி அண்ணா பல்கலைக்கழக பதிவாளருக்கு எதிராக ஓய்வு பெற்ற பேராசிரியர் தேவதாஸ் மனோகரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் நோட்டீஸ் அனுப்பியும் நேரில் ஆஜராகாததால் பதிவாளர் ஜெ.பிரகாஷுக்கு எதிராக பிடிவாரண்ட் பிறப்பித்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் கிருஷ்ணகுமார், குமரேஷ் பாபு அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ஜெ.பிரகாஷ் நேரில் ஆஜரானார். அவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அவினாஷ் வாத்வானி, வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம் காரணமாகவும், நோட்டீசில் பெயர் பிழையாக அச்சிடப்பட்டிருந்ததாலும் பதிவாளர் அன்றைய தினம் ஆஜராக இயலவில்லை என கூறினார். விசாரணையை ஜூலை 22–ந் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# கொலையாளிகளை உடனடியாக கைது செய்யாவிட்டால் மாநிலம் முழுவதும் போராட்டம் வெடிக்கும்: சீமான் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 16–

மதுரையில் நாம் தமிழர் கட்சி நிர்வாகி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கொலையாளிகளை உடனடியாக கைது செய்யாவிட்டால் மாநிலம் முழுவதும் போராட்டம் வெடிக்கும் என்று சீமான் கூறியுள்ளார்.

மதுரையில்நாம்தமிழர்கட்சிநிர்வாகி வெட்டிக் கொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாம் தமிழர் கட்சியின் மதுரை வடக்குத் தொகுதி துணைச்செயலாளராக இருந்த அன்புத்தம்பி பாலசுப்பிரமணியன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். ஈவிரக்கமற்ற இக்கொடுஞ்செயலை நிகழ்த்திட்டவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஈடுசெய்ய முடியாதப் பேரிழப்பைச் சந்தித்திருக்கும் தம்பியின் குடும்பத்தாரை எவ்வாறு ஆற்றுப்படுத்துவதென்று தெரியாது கலங்கி நிற்கிறேன். இப்போது நினைத்தாலும் நெஞ்சம் பதறுகிறது. மனது கனக்கிறது.

### சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு எந்தளவுக்கு சீர்கெட்டுள்ளது என்பதற்கு தம்பி பாலசுப்ரமணியனின் படுகொலையும் ஒரு கொடும் சாட்சியாகும். எவரையும் கூலிப்படையினரைக் கொண்டு எளிதாக வெட்டிச் சாய்த்து விடலாமென்றால், எங்கு இருக்கிறது சட்டம் ஒழுங்கு? என்ன செய்கிறது காவல்துறையும், உளவுத்துறையும்? இதுதான் மாநிலத்தைக் கட்டிக் காக்கும் இலட்சணமா? வெட்கக்கேடு! இன்னும் எத்தனை உயிர்களைப் பலிகொடுக்கப் போகிறோம்? இறந்தவர்களின் உடலுக்குப் பூ போடுவதற்கா காவல்துறை? அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்குமே பாதுகாப்பு இல்லையென்றால், எளிய மக்களுக்கு இம்மாநிலத்தில் என்ன பாதுகாப்பு இருக்கப்போகிறது? இதென்ன தமிழ்நாடா? இல்லை! உத்தரப்பிரதேசமா? எங்குப் பார்த்தாலும் வன்முறைத்தாக்குதல்கள், கொலைகள், சாதிய மோதல்கள், போதைப்பொருட்களின் புழக்கம், ரௌடிகளின் அட்டூழியம், கூலிப்படைக்கலாச்சாரம், கள்ளச்சாராய விற்பனை என தமிழ்நாட்டின் நிலை மிக மிக மோசமாக இருக்கிறது.

குற்றங்கள் நடந்தேறியப் பிறகு, கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுப்பதும், இறந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுமா அரசின் வேலை? குற்றங்களே நிகழாத ஒரு சமூகத்தைப் படைத்து, சட்டத்தின் ஆட்சியை முழுமையாக நிலைநிறுத்துவதுதானே அரசின் தலையாயக் கடமையும், பொறுப்பும்! அதனைச் செய்ய தவறிய அரசு, இருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? ஏற்கனவே, கன்னியாகுமரியில் எனது ஆருயிர் தம்பி சேவியர்குமாரை இதேபோல ஒரு படுகொலையால் இழந்தேன். இப்போது தம்பி பாலசுப்ரமணியனையும் இழந்து நிற்கிறேன்.

### தமிழகம் முழுவதும் போராட்டம் வெடிக்கும்

தம்பி பாலசுப்ரமணியனைப் படுகொலை செய்திட்ட கொலையாளிகளையும், அதன் பின்புலத்தில் இருந்து இயக்கியவர்களையுமென மொத்தக் குற்றவாளிகளையும் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு முன்பாகவே, விரைந்து கைதுசெய்ய வேண்டும். கைதுசெய்து, அக்கொலையாளிகளுக்குக் கடும் தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கு வலியுறுத்துகிறேன். அதனைச் செய்யத் தவறினால், மாநிலம் முழுவதும் போராட்டம் வெடிக்குமென எச்சரிக்கிறேன்.

இத்தோடு, தம்பியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும், நாம் தமிழர் சொந்தங்களுக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்து இக்கொடுந்துயரில் பங்கெடுக்கிறேன். தம்பி பாலசுப்ரமணியனுக்கு எனது கண்ணீர் வணக்கம்.

இவ்வாறு சீமான் கூறியுள்ளார்.

# சூலூர் அருகே நள்ளிரவில் வீட்டில் தீப்பிடித்து நண்பர்கள் 3 பேர் பலி

கோவை, ஜூலை 16–

சூலூர் அருகே நள்ளிரவில் வீட்டில் தீப்பிடித்து நண்பர்கள் 3 பேர் பலியானார்கள்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே கடமலைக்குன்று என்ற இடத்தைச் சேர்ந்தவர் அழகர்ராஜா (வயது 30). இவர் கோவையில் பெட்ரோல் டேங்கர் லாரி டிரைவராக வேலை பார்த்து வந்தார். இவர் பணிக்கு செல்வதற்கு வசதியாக சூலூர் அருகே உள்ள முத்துக்கவுண்டன்புதூரில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு வசித்தார். இவருடன் அவரது ஊரைச் சேர்ந்த 4 லாரி டிரைவர்களும், தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் 2 பேரும் தங்கியிருந்தனர். இந்நிலையில் நேற்றிரவு 12 மணி அளவில் மதுபோதையில் இருந்த ஓட்டுனர்கள் சிலிண்டர் கேஸ் அடுப்பின் அருகில் வைத்துக் கொண்டே பெட்ரோலை கேனில் ஊற்றி உள்ளனர். அப்போது திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் முத்துகுமார், அழகுராஜ் ஆகிய 3 ஓட்டுனர்கள் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

அவர்களுடன் இருந்த இந்த தீ விபத்தில் சிக்கி பாண்டீஸ்வரன், மனோஜ், வீரமணி, தினேஷ் ஆகியோர் காயமடைந்தனர். இதனை அடுத்து அவர்களின் அலறல் சத்தத்தை கேட்ட அக்கம்பக்கத்தினர், சூலூர் தீயணைப்புத்துறை மற்றும் காவல் துறையினருக்கு தகவல் அளித்தனர்.

அங்கு வந்த போலீசார் மற்றும் தீயணைப்புத்துறையினர் காயம் அடைந்த 4 பேரை மீட்டு சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் 4 பேரில் இருவர் 80 சதவீத காயங்களுடனும், மற்ற இருவர் 45 சதவீத காயங்களுடனும் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த 3 பேரின் உடல் பிரேத பரிசோதனைக்காக இ.எஸ்.ஐ மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிர் தப்பிய பாண்டீஸ்வரன் என்பவர் தான் சமையல் வேலை செய்து கொண்டிருந்துள்ளார். அவரிடம் மாஜிஸ்திரேட்டு நடந்த விவரங்களை வாக்குமூலமாக பெற்றுள்ளார். அந்த வாக்குமூலத்தின் பெயரிலேயே தற்போது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்த கியாஸ் சிலிண்டர் வெடிக்கவில்லை. சிலிண்டர் வெடித்து இருந்தால் அந்த வீடு மட்டுமல்லாமல் பக்கத்து வீடுகளும் சேதம் அடைந்து உயிர்ச்சேதம் அதிகரித்து இருக்கும். தீயணைப்பு வீரர்கள் துரிதமாக செயல்பட்டு சிலிண்டர் வெடிப்பதற்குள் அதனை குளிர்வித்து வெளியே கொண்டு வந்தனர்.


GO COLORS!

## கோ ஃபேஷன் (இந்தியா) லிமிடெட்

CIN: L17291TN2010PLC077303

பதிவு அலுவலகம்: எண்.18, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு 600 034
Phone: 044-4211 1777, Website: www.gocolors.com, E-mail: companysecretary@gocolors.com

### வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட பொதுவான சுற்றறிக்கைகள் தேதி ஏப்ரல் 08, 2020, ஏப்ரல் 13, 2020, மே 05, 2020, ஜனவரி 13, 2021, மே 05, 2022, டிசம்பர் 28, 2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 மற்றும் மே 12, 2020, ஜனவரி 15, 2021, மே 13, 2022, ஜனவரி 05, 2023 மற்றும் அக்டோபர் 07, 2023 தேதியிட்ட பொருந்தக்கூடிய செபி சுற்றறிக்கைகள் (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்") ஆகியவற்றுக்கு இணங்க, அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகத்தை பரிவர்த்தனை செய்வதற்காக நிறுவனத்தின் 14வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) **புதன்கிழமை, ஆகஸ்ட் 07, 2024 அன்று இந்திய நேரப்படி காலை 10.30 மணிக்கு** காணொளி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி ("OAVM") முறையில் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. உறுப்பினர் VC/OAVM மூலம் AGM–ல் கலந்து கொள்ள முடியும் அல்லது https://www.evoting.nsdl.com/–ல் நேரடி வெப்காஸ்ட் மூலம் பார்க்க முடியும். இந்த வருடாந்திர பொதுக் கூட்டம் MCA/ SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க VC/ OAVM மூலம் நடைபெறுவதால், உறுப்பினர்களின் நேரடி வருகை தவிர்க்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 103–ன் கீழ் VC / OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள், குறைந்தபட்ச கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

டெபாசிட்டரிகள் மற்றும் நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்கள் அனைவருக்கும் இயக்குநர்களின் அறிக்கையுடன் 14வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு, மார்ச் 31, 2024–ல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான தணிக்கையாளர் அறிக்கை மற்றும் நிறுவனத்தின் கணக்குகள் ஆகியவை மின்னணு முறையில் ஜூலை 15, 2024 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.gocolors.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (“NSE”) இணையதளம் www.nseindia.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட் (“பிஎஸ்இ”) இணையதளம்www.bseindia.com–லும்கிடைக்கின்றன.

**மின்னணு வாக்களிப்பு தகவல்**

ஜூலை 31, 2024 கட் ஆஃப் தேதியின்படி, உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமைகள் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும்.

சட்டத்தின் பிரிவு 108 மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20 மற்றும் செபி (LODR) ஒழுங்குமுறைகள் 2015–ன் ஒழுங்குமுறை 44 ஆகியவற்றின் விதிகளுக்கு இணங்க, நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") வழங்கிய மின்னணு வாக்குப்பதிவு முறையை ("தொலைதூர மின்னணு வாக்களிப்பு") பயன்படுத்தி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வருடாந்திர பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களின் மீது வாக்களிக்கும் உரிமை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியும் வருடாந்திர பொதுக் கூட்ட காலத்தில் ஏற்படுத்தப்படும் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காதவர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க முடியும். ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பின்னரும் கூட வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் மின்னணு வடிவில், காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கான தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்ட காலத்தில் மின்னணு முறையிலான வாக்களிப்பு குறித்து அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன மற்றும் இவை www.gocolors.com என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும், இந்திய தேசிய பங்குச் சந்தையின் (“NSE”) www.nseindia.com என்ற இணையதளத்திலும், பிஎஸ்இ லிமிடெட்டின் (“BSE”) இணையதளம் www.bseindia.com மற்றும் NSDL–ன் இணையதளம் evoting@nsdl.co.in–லும் கிடைக்கிறது.

ஜூலை 31, 2024 புதன்கிழமை, கட் ஆஃப் தேதியின்படி, டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் உறுப்பினர்களின் பதிவேடு அல்லது நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு– வாக்களிக்கும் வசதியைப் பெற அல்லது மின்னணு வாக்குப்பதிவுக்கு தகுதியுடையவர்கள். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட் ஆஃப் தேதியின்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தின் அவர்களின் பங்கின் விகிதத்தில் இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு சனிக்கிழமை **ஆகஸ்ட் 03, 2024 அன்று காலை 9.00 மணிக்கு துவங்கி செவ்வாய்க்கிழமை ஆகஸ்ட் 06, 2024 அன்று மாலை 5.00 மணிக்கு** முடிவடைகிறது. அதன் பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை NSDL–ஆல் நிறுத்தப்படும். கட் ஆஃப்தேதி அதாவது ஜூலை 31, 2024 அன்று நிறுவனத்தின் பங்குகளைப்பெற்று உறுப்பினராகி இருக்கும் எவரும், evoting@nsdl.co.in என்ற முகவரிக்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்காக NSDL–ல் ஏற்கனவே பதிவுசெய்துள்ள உறுப்பினர்கள் தங்கள் தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம்.

காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், ஃபோலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்புறம்), PAN (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்). ஆகியவற்றை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரின் (RTA) einward.ris@kfintech.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை அனுப்பி அல்லது மாற்றாக படிவம் ISR-1 ஐ அனுப்பி (நிறுவனத்தின் இணையதளம் https://cdn.shopify.com/s/files/1/0598/8158/6848/files/Communication_to_Shareholders_faeb76f2-6527-4ad7-9b37-75fd530ba287.pdf?v=1655728869ல் கிடைக்கும்) மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொள்ளலாம். மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளருடன் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பிக்கலாம்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்வி/குறை இருந்தால், NSDL–ன் மின்னணு வாக்களிப்பு இணையதளத்தின் பதிவிறக்கங்கள் பிரிவின் கீழ் கிடைக்கும் பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேடு ஆகியவற்றை உறுப்பினர்கள் பார்க்கவும் அல்லது திருமதி.பிரஜக்தா, உதவி மேலாளர், NSDL, 4வது தளம், 'A' விங், டிரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பௌண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை 400 013. மின்னஞ்சல்: evoting@nsdl.co.in, தொலைபேசி: 022 4886 7000 மற்றும் 022 2499 7000.–ல் தொடர்பு கொள்ளவும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பதை நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் ஆய்வு செய்ய ஆய்வாளராக மெசர்ஸ் ஸ்ரீநிதி ஸ்ரீதரன் அன்ட் அசோசியேட்ஸ் பிராக்டிசிங் நிறுவனச் செயலாளர் (உறுப்பினர் எண்: 47244, சி.பி.எண்.17990) Ms. ஸ்ரீநிதி ஸ்ரீதரன் நியமிக்கப்பட்டுள்ளார். வருடாந்திர பொதுக் கூட்டம் முடிந்த இரண்டு தினங்களுக்குள் ஆய்வாளர் அறிக்கையுடன் முடிவுகள் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதங்கள் (NSE & BSE), NSDL மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.gocolors.com–ல் பதிவேற்றம் செய்யப்படும்.

ஆவணங்கள் மின்னணு முறையில் உறுப்பினர்களின் ஆய்வுக்குக் கிடைக்கும். உறுப்பினர்கள் ஆய்வுக்கான கோரிக்கையை companysecretary@gocolors.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**புத்தகம் மூடல்**

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 91 மற்றும் செபி (LODR) ஒழுங்குமுறைகள் 2015–ன் ஒழுங்குமுறை 42 ஆகியவற்றுக்கு இணங்க, ஆகஸ்ட் 07, 2024 அன்று திட்டமிடப்பட்ட 14வது ஆண்டு பொதுக் கூட்டத்தின் (AGM) நோக்கத்திற்காக, பங்கு பரிமாற்ற புத்தகங்கள் மற்றும் உறுப்பினர்களின் பதிவு ஆகஸ்ட் 01, 2024 முதல் ஆகஸ்ட் 07, 2024 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

குழு உத்தரவுப்படி
கோ ஃபேஷன் (இந்தியா) லிமிடெட்டிற்காக
V. காயத்ரி
நிறுவனச் செயலாளர்

இடம்: சென்னை
தேதி: ஜூலை 16 , 2024



## அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுக்கா, கேசவராயன்பேட்டை, லட்சுமி நகர், எண்.99 முகவரியில் வசித்து வரும் மணிமேகலை (ஆதார் அட்டை எண். 4472 3089 2551) க/பெ. வ.திருவெங்கடாசலம் சுமார் 70 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2005ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவணம் எண்.354/2005 தேதி 30.03.2005 தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால் எனது 9994825994 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மணிமேகலை**
எண்.99, லட்சுமி நகர், செங்கல்பட்டு மாவட்டம்,
செய்யூர் தாலுக்கா, கேசவராயன்பேட்டை,
கைப்பேசி எண் : 9994825994



## பொது அறிவிப்பு

சென்னை–600 011, திரு.வி.க. நகர், அய்யாவு தெரு, எண்.27 என்ற முகவரியில் வசிக்கும் P. மோகன் 7558834825246, த/பெ. பெருமாள் (லேட்) ஆகிய நான் 13.07.2024 தேதி மதியம் சுமார் 1 மணியளவில் திருவொற்றியூரிலிருந்து ராயபுரம் நெ.27, வீராசாமி தெருவில் வசிக்கும் மூத்தமாமி L. இந்திராணி அவர்களை சொத்து பிரிப்பது சம்பந்தமாக பார்க்க எனது TN–05–CD–3370 என்ற இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்போது இரு சக்கர வாகனத்தில் பிளாஸ்டிக் கவரில் கைப்பிடி அருகில் மாட்டி வைத்திருந்த செம்பியம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த (1) 1/1952/1978 தேதி 4.8.1978 சர்வே எண்.149 என்ற இடத்தின் 1344 சதுர அடி மற்றும் (2) அசல் ஆவண எண்.2983/1992 தேதி 03.06.1992 ஆகிய இரண்டு சொத்தின் ஒரிஜினல் ஆவணங்கள் எதிர்பாராத விதமாக தொலைந்து விட்டது. பல இடங்களில் ஆவணங்களை தேடியும் கிடைக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஆவணங்களை கண்டெடுப்பவர்கள் கீழ்கண்ட எனது முகவரியில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**P. மோகன்**
எண்.27, அய்யாவு தெரு, திரு.வி.க. நகர், சென்னை–600 011,
செல் நெ.: 9790834468
ஆதார் எண்: 75883482 5246



## ஏவிடி நேச்சுரல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்

CIN : L15142TN1986PLC012780
பதிவு அலுவலகம் : 60 ருக்மணி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
Tele.fax: 044-28584147, Email : avtnpl@avtnatural.com, www. avtnatural.com

### அறிவிப்பு

கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் ("MCA") பொதுச் சுற்றறிக்கை எண். 20/2020 தேதியிட்ட மே 5, 2020க்கு இணங்க, அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின்படியும், சமீபத்தியதுமான பொதுச் சுற்றறிக்கை எண். 09/2023 தேதியிட்ட செப்டம்பர் 25, 2023க்கான (MCA சுற்றறிக்கைகள்) காணொலி காட்சி ("VC") / பிற ஒலி ஒளி சாதனங்கள் ("OAVM") மூலமாக செப்டம்பர் 30, 2024 வரை வருடாந்திர பொதுக் கூட்டத்தை (AGM) நடத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது. மேற்சொன்ன சுற்றறிக்கைகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 (சட்டம்) விதி மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், 2015 தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் MCA சுற்றறிக்கைகள் முறையே இயக்குனர்கள் குழு அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய பிற ஆவணங்களுடன் சேர்த்து கூட்டப்பட உள்ள வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, 2023–24ஆம் ஆண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி அறிக்கை ஆகியவை நிறுவனம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (DP) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். எனவே நிறுவனம் / ஆர்டிஏவில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை இதுவரை பதிவு செய்யாத அல்லது தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்காத அனைத்து பங்குதாரர்களையும் பதிவு செய்யும்படி நிறுவனம் கேட்டுக் கொள்கிறது. மேற்கூறிய ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளம் www.avtnatural.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சஸ் இணையதளங்கள் அதாவது பிஎஸ்இ லிமிடெட் மற்றும் என்எஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் CDSL இணையதளம் www.evotingindia.com–லும் கிடைக்கும்.

மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யும் / புதுப்பிக்கும் முறை

1. காகித வடிவில் பங்குகள் இருந்தால்
   போலியோ எண்ணை மேற்கோள் காட்டி investors@cameoindia.com என்ற மின்னஞ்சல் மூலம் ஆர்டிஏ–க்கு கோரிக்கையை பங்குதாரர் அனுப்பலாம்.
2. டிமேட் வடிவில் பங்குகள் இருந்தால் :
   பங்குதாரர் தயவு செய்து டெபாசிட்டரி பார்ட்டிசிபேண்டை (DP) தொடர்பு கொண்டு, DP அறிவுறுத்தல் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய செயல்முறையின்படி டிமேட் கணக்கில் மின்னஞ்சல் முகவரி மற்றும் வங்கி கணக்கு விவரங்களை பதிவு செய்யலாம்.

குழு உத்தரவுப்படி
ஏவிடி நேச்சுரல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/
ஷரன் ஜோஷ்
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 15.07.2024



TVS Supply Chain Solutions BELIEVE IN THE POWER OF US

## டிவிஎஸ் சப்ளை செயின் சொலுஷன்ஸ் லிமிடெட்

CIN: L63011TN2004PLC054655
பதிவு அலுவலகம் : 10 , ஜவஹர் சாலை , சொக்கிக்குளம் , மதுரை – 625 002
தொலைபேசி : 44 6685 7777/ இணையதளம் : https://www.tvsscs.com/
மின்னஞ்சல் முகவரி : cs.compliance@tvsscs.com

### டிவிஎஸ் சப்ளை செயின் சொலுஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் 20 வது வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு

டிவிஎஸ் சப்ளை செயின் சொலுஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் 20 வது வருடாந்திர பொதுக் கூட்டமானது , (AGM),நிறுவனங்கள் சட்டம் 2013–ன் (சட்டம்) கூறுகளின்படியும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட விதிகளின் படியும் செபி அமைப்பின் (பட்டியலிடுதல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) நெறிமுறைகள் 2015 ( செபி பட்டியலிடுதல் நெறிமுறைகள் ) விதிகளுக்கு இணங்கவும் அவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளுக்கும் இது தொடர்பாக செபி அமைப்பு வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் வருடாந்திர பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கான அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை நிறைவேற்றுவதற்காக ஆகஸ்ட் 9 , 2024 வெள்ளிக் கிழமையன்று இந்திய நேரப்படி பிற்பகல் 3.00 மணிக்கு காணொளிக் காட்சி / பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக ( VC / OAVM ) நடைபெறும் .

உறுப்பினர்கள் காணொலிக் காட்சி / பிற ஒலி ஒளி சாதனங்கள் மூலமாக, என்எஸ்டிஎல் எனப்படும் நேஷனல் செக்யுரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்–ன் வசதி வாயிலாக வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்க நிறுவனமானது ஏற்பாடு செய்துள்ளது.வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு நிறுவனத்தின் உறுப்பினர்கள்,என்எஸ்டிஎல் மூலம் தங்கள் வாக்குகளை இ–வோட்டிங் எனப்படுகிற மின்னணு வாக்கு மூலம் செலுத்துவதற்கான வசதியை நிறுவனம் வழங்கிடும். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலைதூர இ–வோட்டிங் / இ –வோட்டிங் மூலமாக வாக்கு செலுத்துதல் குறித்த நடைமுறை விதிகள் வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன .

சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2023–24 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை உடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பானது , நிறுவனத்துடன் / பதிவாளர் மற்றும் மாற்ற முகவர் (RTA) உடன் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் உடன் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்து கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே மின்னணு வழிமுறை வாயிலாக அனுப்பி வைக்கப்படும் .

வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பும் நிதி ஆண்டு 24-க்கான வருடாந்திர அறிக்கையும் நிறுவனத்தின் இணையதளம் https://www.tvsscs.com//ல் இடம்பெற்றுள்ளது. மேலும், அவற்றை பங்குச்சந்தைகளான பிஎஸ்இ லிமிடெட்–ன் www.bseindia.com இணையதளத்திலும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்–ன் www.nseindia.com இணையதளத்திலும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலைதூர இ–வோட்டிங்/இ–வோட்டிங்–க்கான வழிவகை செய்யும் முகமையான என்எஸ்டிஎல்–ன் https://www.evoting.nsdl.com/ இணையதளத்திலும் காணலாம் .

வருடாந்திர பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பையும் நிதி ஆண்டு 24 க்கான வருடாந்திர அறிக்கையையும் பெற்றுக் கொள்ள ஏதுவாக, உறுப்பினர்கள் , கீழ்க்காணும் விதிகளின்படி, தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு / புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

**விதிமுறைகள்**

(அ) பிசிக்கல் என்கிற முறையில் தங்கள் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் , நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் மாற்ற முகவரான லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (RTA) உடன்rnt.helpdesk@linkintime.co.in ல் அதற்கென உள்ள படிவமான ISR-1 ல் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ள வேண்டும் . புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு புதுப்பித்துக் கொள்வதற்கான நியதிகள் நிறுவனத்தின் https://www.tvsscs.com/ இணையதளத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ ) டீமேட் என்கிற முறையில் தங்கள் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் , தாங்கள் சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களை தொடர்புகொண்டு , தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்வதையும் கட்டாயமான வங்கிக் கணக்கு விவரம் புதுப்பித்தலையும் மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்திற்கு உட்பட்டும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் மற்றும் செபி அமைப்பின் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் தெரியவும் அவர்கள் நலனுக்காகவும் இந்த விளம்பர அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

டிவிஎஸ் சப்ளை செயின் சொலுஷன்ஸ் லிமிடெட் – க்காக
P D **கிருஷ்ண பிரசாத்**
நிறுவன செயலர்

இடம் : சென்னை
தேதி : **July 16 ,2024**